விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 344 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 12 புதன்கிழமை (27.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## மாவீரர் தினம் இன்று

- கொட்டும் மழைக்கு மத்தியில் வீரமறவர்களை அஞ்சலிக்க ஏற்பாடு.
- நினைவேந்தலுக்கு தயார் நிலையில் துயிலும் இல்லங்கள்.



தமிழ் மக்களின் உரிமை குரலாக நின்று ஈழ தேச விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து உயிரினை ஈய்ந்து உடலை உரமிட்ட வீரமறவர்களின் உயர் தியாகத் 02

## இரணைமடுக் குளத்தின் 6 வான் கதவுகள் திறப்பு

(கிளிநொச்சி)

இரணைமடுக் குளத்தின் 06 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. நீர்வரத்து அதிகமானால் மேலும் கதவுகள் திறக்கப் படலாம். 15

## உயர்தரப் பரீட்சை
## 3 நாட்களுக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

நிலவும் சீரற்ற காலநிலையைக் 15

## அர்ச்சுனாவுக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவுக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுளா ரத்நாயக்க உத்தரவிட் 15

## தாழமுக்கம் சூறாவளியாக மாறும் அபாயம்

### வடக்கில் 200 மில்லி மீற்றருக்கு அதிகளவு பலத்த மழைக்கு வாய்ப்பு



(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருக்கும் தாழமுக்கம் சூறாவளியாக விரிவடையும் அபாயம் உருவாகியுள்ளது. இதன்மூலம் வடக்கில் 200 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது. (02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கல்வி வலயத்தில் இரு பாடசாலைகள் மூடப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இரண்டு பாடசாலைகளை 15

## உயிரிழந்த உறவுகளை நினைவுகூரத் தடையில்லை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர அரசாங்கம் எவ்விதத் தடைகளையும் ஏற்படுத்தாது என்பதுடன், தடைகளை ஏற்படுத்த 15

## வடக்கில் சீரற்ற காலநிலையால் சுமார் 61 ஆயிரம் பேர் பாதிப்பு



(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 17 ஆயிரத்து 532 குடும்பங்களைச் சேர்ந்த 61 15



## தமிழர் தாயகத்தில் பிரபாகரனின் 70ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம்



15

## சீரற்ற காலநிலையால் 15 மாவட்டங்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக 15 மாவட்டங்களில் 22, 532 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர் 15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மின்சார விநியோகத்தில் தடை ஏற்படின் அறிவிக்குக

## இலங்கை மின்சார சபை

(கொழும்பு)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மின்சார விநியோகத்தடை ஏற்படுமாயின் அது தொடர்பில் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார விநியோகத்தடை ஏற்படும் நிலையில், அது தொடர்பில் அறிவிப்பதற்கான முறைமையினையும் இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன்படி, CEBCare எனும் செயலி ஊடாக அல்லது இலங்கை மின்சார சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் அல்லது 1987 எனும் துரித இலக்கத்திற்குக் குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் அறிவிக்க முடியுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் சேவையினை பெற்றுக்கொள்ள முடியுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

### யாழில் தொடர்மழையால்

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு

## பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன்



நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையின் காரணத்தினால் யாழ்ப்பாண மாவட்டமும் பாதிப்புற்றுள்ள நிலையில் மக்களினை இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் தொடர் மழையால் இதுவரை 2706 குடும்பங்களினைச் சேர்ந்த 9642 பேர் பாதிப்படைந்துள்ளனர். 48 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது.

தொடர் மழையின் காரணத்தினால் ஏற்படும் வெள்ள அனர்த் தத்திலிருந்து தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் தேவை ஏற்படின் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் இது குறித்து கிராம சேவர்கள் பிரதேச செயலகர்களுக்கு உடன் அறியத் தருமாறும் அதன் ஊடாக அவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் மாவட்ட செயலகம் அறிவுறுத் தியுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு இடைத் தங்கல் முகாம்களும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஒரு இடைத்தங்கள் முகாமும் இதுவரை நிறுவப்பட்டுள்ளது.(ம-7)

# வடக்கு இளைஞர்கள் ஐவர் ரஷ்ய இராணுவத்தில் இணைப்பு

## வடக்கு ஆளுநரிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய இராணுவத்தில் சேர்த்ததாக கூறப்படுவது தொடர்பில் அவர்களது பெற்றோரால் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களிடம் நேற்று காலை முறைப்பாடு செய்யப்பட்டது. தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு ஆளுநரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம், கரவெட்டி, முள்ளியவளையைச் சேர்ந்த இளைஞர்களின் பெற்றோரே, ஆளுநர் செயலகத்தில் நேற்று காலை 26.11.2024 ஆளுநரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

பெற்றோரது கோரிக்கையை செவிமடுத்த ஆளுநர், உடனடியாக வெளிவிவகார அமைச்சின் செயலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை தெரியப்படுத்தினார். பெற்றோர்களிடம் அவர்களது விவரங்களைப் பெற்று வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

# வெள்ளத்தில் தத்தளிக்கும் வடக்கு







பலாலி வீதியில் கடும் மழையால் முறிவடைந்த மரம்



## தாழமுக்கம்...

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம், ஆழ்ந்த தாழமுக்கமாக வலுவடைந்துள்ள நிலையில் அது இன்று சூறாவளியாக மாறக்கூடிய அளவுக்கு விரிவடைந்து கிழக்குக் கரையை அண்மித்ததாக பயணிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் தாக்கம் காரணமாக எதிர்வரும் 36 மணித்தியாலங்களில் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி வடக்கு, வடமத்திய, மத்திய, மற்றும் வட மேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்தின் சில இடங்களிலும் 200 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அதேநேரம், நாட்டை சூழவுள்ள கடற்பகுதிகளில் காற்றின் வேகமானது இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரப் பகுதிகளுக்கு அண்மித்த கடற்பரப்புகளில் கடல் அலைகள் சீற்றமாகக் காணப்படும்.

எனவே, மறு அறிவித்தல் வரை நாட்டை சூழவுள்ள ஆழமான மற்றும் ஆழமற்ற கடலுக்குச் செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மாவீரர்...

தினை நினைவேந்தும் கார்த்திகை 27 மாவீரர் நாள் இன்று உலகமெங்கும் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப்படவுள்ளது.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களச் சாவடைந்த லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவாக, அவர் உயிரிழந்த கார்த்திகை 27 ஆம் திகதி, விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மாவீரர் தினமாக 1987ஆம் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்டது.

அந்தவகையில் மாவீரர்களின் உயர் தியாகத்தினை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கும் வகையில் தமிழர் தாயகத்தில் உள்ள வீரமறவர்கள் விதைக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் இன்று காலைமுதல் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மாலை 6:05 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு 6:06 மணிக்கு ஒரு மணித்துளி அக வணக்கம் செலுத்தப்பட்டு அக வணக்கம் நிறைவுற்றதும் 6:07 மணிக்கு மாவீரர்களின் பெற்றோர், உறவுகளினால் ஈக சுடர்கள் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கு சமாந்தரமாக தாயகத்திலும் தமிழர் புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர் நினைவெழுச்சி நிகழ்வுகள் வீரமறவர்களின் உறவுகளுக்கான கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் வான் பாயும் நிலையில் நூற்றுக்கணக்கான குளங்கள்!

## • 3 குளங்கள் உடைப்பு



(குருமன்காடு)

**வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக 120 இற்கும் மேற்பட்ட குளங்கள் முழுக்கொள்ளவை எட்டி வான் பாய்வதுடன், 3 குளங்கள் உடைப்பெடுத்துள்ள தாகவும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.**

வவுனியாவில் கடந்த சில நாட்களாக மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது. இதனால் தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் நிறைந்து காணப்படுவதுடன், பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. இந்நிலையில் வவுனியாக்குளம் தனது முழுக் கொள்ளளவை எட்டியுள்ளதுடன், வான் பாய ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, மாவட்டத்தின் 120 இற்கும் மேற்பட்ட குளங்கள் தனது முழுக்கொள்ளளவை எட்டி மேலதிக நீர் வெளியேறி வருவதுடன், அநேகமான குளங்களில் 90 சதவீதமான அளவு நீர் நிறைந்துள்ளன.

இதுவரை செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இராமயன்குளம், அருவித் தோட்டம் நாகராயன்குளம் மற்றும் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மடத்து விளாங்குளம் ஆகியவற்றின் அணைக்கட்டுக ளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவற்றை சீர்செய் யும் பணிகளில் அதிகாரிகளின் ஆலோசனைக ளுடன் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (ரி-8)


In partnership with Canada WUSC EUMC hatch.

## இலங்கையின் வடக்கு பிரதேசத்திலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான புதிய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

பால்நிலை பதிலளிப்புடனான தொழில் முயற்சி சூழமைவை இலங்கையின் வடக்கே கட்டியெழுப்பும் வளர்ச்சி, மீண்டெழும்தன்மை, முதலீடு மற்றும் பயிற்சி (GRIT) செயற்றிட்டமானது கனேடிய பூகோள விவகார (GAC) மற்றும் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை (WUSC) ஆகியவற்றால் செயற்படுத்தப்படும் ஆறு ஆண்டுகால (2022-2027)கூட்டிணைவு முன்முயற்சியாகும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது குறிப்பாக வடமாகாணத்திலுள்ள இளம்பெண் தொழில்முயற்சியாளர்களின் நலன்கள், உள்ளடங்கலான வளர்ச்சி மற்றும் மீண்டெழும் தன்மை போன்றவற்றை ஊக்குவித்து, பெண்களுக்கான நிலைபேறான பொருளாதார வலுப்படுத்தலுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதை நோக்காக கொண்டுள்ளது.

GRIT திட்டத்தின் பிரதான பங்காளர்களாக Hatch, Lanka Impact Investing Network (LIIN) மற்றும் Yarl IT Hub ஆகியோர் காணப்படுகின்றனர். 2018 இல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கையின் முன்னணி வியாபார சூழமைவு வகிபங்காளரான Hatch அமைப்பானது 200இற்கு மேற்பட்ட புதிய தொழில் ஆரம்பிப்புகளுக்கு ஆதரவளித்துள்ளதுடன் 530 தொழில்களை உருவாக்கியுள்ளது மற்றும் சிறிய சமூகங்களிலுள்ள நுண்ணிய,சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான வழங்குநர்களையும் வலுப்படுத்தியுள்ளது.

புத்தாக்கத்தினுள்ளும் தொழில் முயற்சியாண்மையினுள்ளும் அணுகுதல், நிலைபேறானதன்மை மற்றும் உள்ளடங்கலானதன்மையினை மேம்படுத்தல் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தினை முன்னெடுத்துச் செல்வதில் தொழில்முயற்சியாளர்களின் முக்கியமான வகிபாகத்தினையும் மற்றும் புத்தாக்கத்தினை தூண்டுவதில் கூட்டிணைவதின் பலத்தினையும் அடையாளங்காண உதவுதல் என்பனவும் Hatch இனுடைய பணியாகும். கவனமாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், வலுவான வழி காட்டல்கள், உள்ளூர் மற்றும் உலகளாவிய பங்காளர், முதலீட்டாளர்கள் மற்றும் பங்களிப்பாளர் வலையமைப்புகளுடனான இணைப்புகள் போன்றவற்றினூடாக Hatch ஆனது புதிய தொழில் ஆரம்பிப்புகளுக்கு ஆதரவளிக்கின்றது. வியாபார கருவாக்கல் மற்றும் விரிவாக்கங்களுக்கான பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கக்கூடிய வடிவமைப்பாளர்கள், தொழில்முயற்சியாளர்கள், முதலீட்டாளர்கள், நிதிய முகாமையாளர்கள், நிபுணர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் சட்ட வல்லுநர்கள் போன்றவர்களை உள்ளடக்கிய அணியினை Hatch ஆனது கொண்டுள்ளது.

GRIT நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு அங்கமாக Hatch ஆனது முதலாவது வியாபார கருவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தினை குறிப்பாக வியாபார அபிவிருத்தி ஆதரவினை தேடுகின்ற ஆரம்பநிலை பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக ஆரம்பிக்கின்றது. 2025 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த மூன்றுமாத வியாபார கருவாக்கல் நிகழ்ச்சித்திட்டமானது தெரிவுசெய்யப்பட்ட எட்டு பெண் தொழில் ஆரம்பிப்பாளர்களுக்கான பூரணமான வியாபார அபிவிருத்தி வழிகாட்டல், ஆலோசனைகள், வலையமைப்பு மற்றும் சந்தை அணுகல் வாய்ப்புகள், இயலளவு அபிவிருத்தி நன்கொடை மற்றும் ஒத்த மனப்பாங்குடைய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பங்காளர் வலையமைப்புகளுடனான தொடர்புகள் போன்றவற்றை வழங்கும். தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தமது சந்தை அடைவை விரிவுபடுத்தவும் நிலைபேறான வருமான மூலங்களை அபிவிருத்தி செய்யவும் மற்றும் தமது வியாபாரங்களை வலுப்படுத்தவும் இந்த வியாபார கருவாக்கல் செயற்றிட்டமானது உதவும்.

**விண்ணப்ப நிபந்தனைகள்:**

- வியாபாரமானது பெண் ஸ்தாபகரால் நடத்தப்படுவதாக அல்லது அவருக்கு உரிமையானதாக இருக்க வேண்டும்.
- ஆரம்பநிலை வியாபார முயற்சிகள் அல்லது உறுதிசெய்யப்பட்ட வியாபார எண்ணங்கள்.
- யாழ்ப்பாணம்/வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபகர்கள்.
- அனைத்து துறைகளும் வரவேற்கப்படுகின்றன. குறிப்பாக வளர்ச்சி அல்லது தாக்க விளைவு சாத்தியமுள்ளவை.
- மூன்றுமாத நிகழ்ச்சித் திட்டத்திலும் முழுமையான பங்குபற்றல் வேண்டப்படுகின்றது.
- வியாபார முன்னனுபவம் அவசியமில்லை. ஆர்வமும் அர்ப்பணிப்பும் வேண்டப்படுகின்றது.
- சமூக, பொருளாதார அல்லது சூழல் தாக்க விளைவை கொண்ட வியாபாரங்களுக்கு முன்னுரிமை.

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் QR குறியீட்டினை ஸ்கான் செய்வதனூடாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் 20.12.2024 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(ச-2496)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியா வரும் மெஸ்ஸி

## ஆவலுடன் காத்திருக்கும் ரசிகர்கள்



அடுத்த ஆண்டு மெஸ்ஸி இந்தியா வர இருப்பதாக கேரள விளையாட்டுத்துறை அமைச்சர் அப்துரஹிமான் தெரிவித் துள்ளார்.

இந்தியாவில் மெஸ்ஸிக்கு அதிகளவிலான ரசிகர்கள் உண்டு. அதிலும் குறிப்பாக கால்பந்து விளையாட்டை பிரதானமாக கொண்டு இருக்கும் கேரளாவில் மெஸ்ஸிக்கு என தனி ரசிகர்கள் பட்டாளமே இருக்கிறது.

இந்நிலையில் அர்ஜென்டினா கால்பந்து ஜாம்பவான் லியோனல் மெஸ்ஸி 14 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியாவிற்கு வருகை தர இருக்கிறார்.

அதிக எதிர்பார்ப்புக்களை கொண்ட இந்த கால்பந்து போட்டியை நடத்துவதற்கான அனைத்து நிதி உதவிகளையும் மாநில அரசு தரப்பில் ஏற்பாடு செய்யப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அடுத்த ஒன்றரை மாத காலத்தில் அர்ஜென்டினா அணி நிர்வாக குழுவைச் சேர்ந்தவர்கள் கேரளா வர உள்ளனர்.

இது தொடர்பாக கேரள அரசும், அர்ஜென்டினா அணி நிர்வாகமும் கூட்டு அறிவிப்பை வெளியிட முடிவு செய்துள்ளோம்.

அதேவேளை அர் ஜென்டினா அணி கேரளா வருவதில் எந்த மாற்றமும் இருக்காது. போட்டியை நடத்தும் திகதியை அர்ஜென்டினா கால்பந்தாட்ட கூட்டமைப்பு அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டதில் இருந்து மெஸ்ஸியின் வருகையை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கின்றனர். (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 180 | 150 | 180-240 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 220 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 200 | 250 | 300 |
| தக்காளி | 350 | 350 | 350 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 200 | 220 | 100-150 | 150 |
| கோவா | 200 | 180 | 200 | 250 | 200 |
| கரட் | 100 | 200 | 200 | 150 | 250 |
| பூசணி | 150 | 120 | 100 | 100 | 200 |
| புடோல் | 180 | 180 | 100 | 150 | 160 |
| வாழைக்காய் | 100 | 80 | 120 | 50-70 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 380 | 350 | 350 | 420 | 400 |
| பாகற்காய் | 600 | 900 | 800 | 550 | 1000 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 100-210 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 120 | 160 | 140 | 200 |
| பயற்றங்காய் | 450 | 400 | 400 | 300 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 180 | 150 | 250 |
| கறிமிளகாய் | 550 | 700 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 800 | 1000 | 700 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | 150 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 100 | 60-80 | 150 |
| தேசிக்காய் | 400 | 600 | 400 | 600-700 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 80-150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 1200 | 670 | 1200 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 100 | 160 | 110 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 150 | 80 | 100 | 60 |
| ஈரப்பலா | 120 | 200 | 150 | 80 | 200 |

# கைலாசபதப்ராப்தி அறிவித்தல்

## குருசாமிக்குருக்கள் கோபாலன் சர்மா



நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் ஸ்தாபக வழித்தோன்றலும் ஆதீன கர்த்தாவும் பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும் பிரதம குருவுமாகிய கௌசிக கோத்திர பிரம்மஸ்ரீ குருசாமிக்குருக்கள் கோபாலன் சர்மா அவர்கள் நேற்று (26.11.2024) செவ்வாய்க்கிழமை கைலாசபதப்ராப்தி அடைந்தார்.

அன்னார் ஸ்வர்க்கியஸ்ரீ குருசாமிக்குருக்கள், சீதாலட்சுமி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் லக்ஷ்மிதேவியின் அன்புக் கணவரும் மைதிலிதேவி, அன்னபூர்ணா, கைலாஷ்சர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்வர்க்கியஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் கமலாதேவி ஆகியோரின் மருமகனும் கணேசசர்மா, வெங்கடேஷ் சர்மா ஆகியோரின அன்பு மாமனாரும் சாய்கிருஷ்ணா, காதம்பரியின் அன்புத் தாத்தாவும் ஸ்வர்க்கியஸ்ரீ குமாரசாமி சர்மா, சண்முகநாத சர்மா, வைத்தீஸ்வரசர்மா, ஸ்வர்க்கியஸ்ரீ கமலாதேவி, சரோஜாதேவி, ஸ்வர்க்கியஸ்ரீ சகுந்தலாதேவி, சுந்தரலட்சுமி, ஜானகிதேவி, ஸ்வர்க்கியஸ்ரீ யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 343, நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோயிலடியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (27.11.2024) புதன்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெற்று தொடர்ந்து தகனசம்ஸ்காரம் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள், கைலாச விநாயக பெருமான் அடியவர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

343, நாவலர் வீதி,
கைலாசபிள்ளையார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
லக்ஷ்மிதேவி - [illegible],
மைதிலிதேவி +919952938284

(2622)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் திறக்கப்பட்ட வான்கதவுகள்



(கொழும்பு)

நிலவும் கடும் மழை காரணமாக மகாவலி கங்கை, ஹெத ஓயாவை அண்மித்த தாழ்நிலப்பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மழை காரணமாக மகாவலி கங்கையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக திம்புலாகல, கந்தளாய், கிண்ணியா, லங்காபுர, மெதிரிகிரிய, மூதூர், சேருவில மற்றும் தமன்கடுவ வெலிகந்தை ஆகிய தாழ் நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை மத்திய மலைநாட்டில் இடைவிடாது பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

மேல் கொத்மலை, விமல சுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்பட்டது.

இந்நீரினை வெளியேற்றுவதற்காக நீரேந்தும் பகுதிகளில் வான்கதவுகள் திறக்கப்பட்டது. இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்தோடு காசல்ரீ நீர்தேகத்தின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது.

அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப்பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது. (நி-8)

# வீதியை விட்டு விலகி விபத்திற்குள்ளான பேருந்து

## பெண் ஒருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புனேவ கும்புகொல்லேவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மழையுடனான சாலையின் வழுக்கும் நிலைமை காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் வவுனியா பொது வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. புனேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# கடும் மழையால் உடைந்த பாலம்

(கொழும்பு)

அம்பாறை மஹோயா பொலநறுவை பிரதான வீதியின் அரலகங்வில போகஸ் சந்தி பகுதியில் நேற்றுக் காலை பாலமொன்று முற்றாக உடைந்துள்ளதாக பொலநறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் பல நாட்களாக பெய்து வரும் கடும் மழை, மகாவலி பிரதேசம் உள்ளிட்ட மேல் பிரதேசங்களில் பெய்து வரும் மழையினால் பாலம் உடைந்துள்ளதுடன், அந்த வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையினால், அதற்கான மாற்றுப் பாதைகள், வாகனப் பயணச் செயற்பாடுகள், முழுமையாக தடைப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை காரணமாக பொலநறுவை லக் பூங்கா பகுதியில் வீசிய சூறாவளி காற்றினால் சுமார் பதினைந்து வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலநறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும், மனாம்பிட்டிய பிரதேசம், பொலநறுவை பட்டகலப்புவ பிரதான வீதி, மானம்பிட்டிய, கல்லெல்ல பிரதேசம் மற்றும் மானம்பிட்டிய பிரதேசங்களில் இருந்து மகாவலி ஆறு பெருக்கெடுத்து ஓடுவதுடன் வெலிகந்த நாமல்கம பகுதியிலும் வாகனங்கள் நீரில் மூழ்கியமையால் வெலிகந்த நாமல்கம பிரதேசம் தடைப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-8)



# தொடருடம் மழையால் பயணிகள் அசௌகரியம்




(முல்லைத்தீவு)

சீரற்ற காலைநிலையால் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள், போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அன்றாட வேலையில் ஈடுபடமுடியாது பாரிய சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அங்காங்கே வெள்ளநீர் அதிகரித்து காணப்படுவதுடன் வீடுகளுக்குள்ளும் வெள்ளநீர் உட்புகுந்துள்ளது. (நி-8-299)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
JSAC
27 கார்த்திகை 2024
"மனிதர்களாய்ப் பிறந்தால் அனைவருமே சமம். ஆண்கள் வேறு, பெண்கள் வேறு இல்லை."
16
2024
(சி-1660)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# இராசிபலன்

27.11.2024
கார்த்திகை 12, புதன்கிழமை
துவாதசி முழுவதும்

அத்தம் காலை 6.23 மணிவரை
சுபநேரம் - 4.42-6.12 மணிவரை
இராகுகாலம் 12.12-1.42 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி

வளவன்




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.




புதிய பொறுப்புக்களும் சுமைகளும் வந்து சேரலாம், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வழக்கமாகச் செய்யும் பணியை இன்று மாற்றியமைப்பீர்கள்.




பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், உங்களின் திறமைகள் மேம்படும் நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




பொருள் வரவிற்கு அத்திவாரமிடுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு.




வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொது வாழ்வில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




தொழிலில் கவனம் தேவை, பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கௌரவமான நாள்.




குடும்பத்தினர் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வரவிற்கேற்ப செலவுகள் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




உறவினர்கள் உங்களின் மனம் போல் நடந்து கொள்வர், புத்திசாதுகளால் புகழ்பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.




நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், சிறப்பாக பணிகளைச் செய்து குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

தனக்கு உதவியதை மறக்காதே, தான் உதவியதை நினைக்காதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அமைச்சர் டக்ளஸின் பிடியாணை இரத்து

(யாழ்ப்பாணம்)

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மருத்துவச்சான்றிதழை சமர்ப்பித்த நிலையில், பிடியாணை இரத்து செய்யப்பட்டுள்ளது.

தனியார் வர்த்தகர் ஒருவருக்கு எதிராக முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் காசோலை மோசடி வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது.

குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் கொழும்பு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முறைப்பாட்டாளரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மன்றில் ஆஜராகாத நிலையில் நீதவானினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் மன்றில் ஆஜராகிய நிலையில் பிடியாணை இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# கால்நடை பாதிப்புக்களை முறையிட விசேட இலக்கம்

## கால்நடை சுகாதார திணைக்களம்

(நெளுக்குளம்)

**வடக்கு மாகாணத்தில் கால்நடைகளுக்கான பாதிப்புக்களை அறிக்கையிடுவதற்குத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.**

வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தின் சகல பகுதிகளிலும் 350 மில்லிலீற்றர் வரையான கடும் மழையுடன் கூடிய காற்று வீசுவதற்கான ஏதுநிலைகள் காணப்படுகின்ற நிலையில், சூழல் வெப்ப நிலையும் 20 டிகிரி செல்சியஸ் வரை குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இத்தகைய காலநிலை மாற்றங்களினால் திறந்த வெளிகளில் வளர்க்கப்படும் கால்நடைகள், கோழிகள் பாரிய அளவில் பாதிப்படையக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு.

எனவே கால்நடைகள் தொடர்பான பாதிப்புக்களின் தகவல்களை வழங்க யாழ். மாவட்டம்- 077 363 8953,கிளிநொச்சி- 077 779 9066, முல்லைத்தீவு - 077 075 5225, வவுனியா - 077 445 7417, மன்னார்- 077 785 3124.

குறித்த பகுதிகளுக்கான தொலைபேசி இலக்கங்களூடாகத் தெரிவிக்க முடியும் என கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-8-299)

# பரீட்சைக்கு இடையூறாக ஏற்றப்பட்ட விண் பட்டம்

## எச்சரித்து விடுவித்த பொலிஸார்

(கரணவாய்)

பருத்தித்துறை பகுதியில் பரீட்சை நிலையத்துக்கு அருகாமையில் பரிச்சாத்திகளுக்கு இடையூறு விளைவிக்கும் விதமாக பட்டம் ஏற்றியதாகத் தெரிவித்து 8 பேர் பருத்தித்துறை பொலிஸாரால் பிடிக்கப்பட்டு எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர்.

க.பொ.த.உயர்தர பரீட்சை நேற்று முன்தினம் ஆரம்பமானது. இந்நிலையில் பருத்தித்துறையில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றின் பரீட்சை நிலையத்துக்கு அருகாமையில் அதிகூடிய சத்தத்துடன் விண் பூட்டிய பட்டத்தினை பறக்கவிடப்பட்டமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனை அடுத்து விரைந்து சென்ற பருத்தித் துறைப் பொலிஸார் பட்டம் பறக்கவிட்ட எட்டு பேரை பட்டம் ஏற்றும் பொருட்களுடன் பிடித்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்று கடும் எச்சரிக்கை விடுத்து பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (6-8-60)

# சிறப்பான பந்து வீச்சினை பதிவு செய்த ஆகஷூக்கு

## ஆளுநர் வாழ்த்து






(யாழ்ப்பாணம்)

17 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து மிகச் சிறப்பான பந்துவீசு பெறுமதியை பதிவு செய்த யாழ். ஹாட்லி கல்லூரியின் மாணவன்,விக்னேஸ்வரன் ஆகாஷ் க்கு வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஆகாஷை தொலைபேசியூடாக நேற்று முன்தினம் தொடர்பு கொண்ட ஆளுநர் அவரை வாழ்த்தியது டன் எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியில் இடம் பிடிக்க வேண்டும் எனவும் தொடர்ந்து சாதனைகளைப் படைக்க வேண்டும் என்றும் ஆளுநர் ஆகாஷிடம் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடை யிலான 17 வயதுக்கு உட்பட் டோருக்கான ஆட்டத்தில் விளையாடிய ஆகாஷ் 5 இலக் குகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

# வீட்டு மதிலை மோதி விழுத்திய கப் ரக வாகனம்

## சுதுமலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

சுதுமலையில் கப் ரக வாகனம் ஒன்றும் கயஸ் ரக வாகனம் ஒன்றும் ஒன்றை ஒன்று முந்தி செல்ல முற்பட்ட வேளை,

வீட்டு மதில் ஒன்றை கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவமானது தாவடி - சுதுமலை வீதியில் அமைந்துள்ள சுதுமலை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது பின் மதில் பாதிக் கப் பட் டுள் ளதுடன் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இதே வேளை இந்த விபத்து சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு எதுவும் இடம் பெறவில்லை என்பதுடன்.

குறித்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மானிப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (6-8)

## நீர்வரத்து அதிகரிப்பு

# தண்ணிமுறிப்பு குளத்தின் வான் கதவுகள் திறப்பு



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற தண்ணிமுறிப்பு குளத்திற்கான நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில் தண்ணிமுறிப்புக் குளத்தின் வான் கதவுகள் நேற்று பிற்பகல் முத்துஐயன் கட்டு நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி மஞ்சுளா யொய்ஸ்குமார் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் நேரடியாக குளப்பகுதிக்கு சென்று பார்வையிட்டதன் பின் திறக்கப்பட்டுள்ளது.

தண்ணிமுறிப்பு குளமானது 21 அடி வரை நீரை சேமிக்க கூடியதாக இருக்கின்ற நிலையில் தற்போது 17" அடி வரை நீர் மட்டம் உயர்ந்த நிலையிலே வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

எனவே தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் விவசாயிகள் விழிப்புடன் இருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு முல்லை தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. மேலும் மாவட்டத்தில் காணப்படும் குளங்களுள் நான்காவது பெரிய குளம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-8-299)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பு



(கொழும்பு)

மழையால் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது

அதன்படி, மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையிலும், ஒக்டோபர் மாதம் முதல் தற்போது வரையிலும் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மற்றும் தற்போது பெய்து வரும் கடும் மழையுடன் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலத்திலும் எலிக்காய்ச்சல் பரவல் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 500 இற்கும் அதிகமான எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக கம்பஹா மாவட்ட பிராந்திய தொற்றுநோய்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக, 35 இறப்புகளும் பதிவாகியுள்ளன.

இது விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளால் தடுக்கப்படக்கூடிய நோயாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகத் தொற்றுநோயியல் துறை தெரிவித்துள்ளது. (நி-8)

## முடிவுக்கு வந்த மருந்துத் தட்டுப்பாடு

(கொழும்பு)

மருந்துகளுக்கு அடுத்த வருடம் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் மருந்துகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில், உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்களிடம் இருந்து பெறக்கூடிய மருந்துகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு விநியோகஸ்தர்களிடம் இருந்து மருந்துகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நோயாளிகளுக்கு தரமான நம்பகமான மருந்துகளை தட்டுப்பாடு இன்றி வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும், இதனை அடைவதற்கு தங்களால் இயன்றதைச் செய்வதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சினால் 49 உள்ளூர் மருந்து உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மருந்துகள் உட்பட 454 மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் கடந்த மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (நி-8)

### கேள்வி அறிவித்தல்

### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை (PSDG)-2024

### புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வடமாகாணம்

1. மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி கொடை - 2024 மூலமான ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வட மாகாண விநியோகஸ்தர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு **புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 15.00 மணி வரை 10.12.2024 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 27.11.2024 ஆம் திகதியிலிருந்து 10.12.2024 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **2000.00 (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், **பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு** எனும் முகவரிக்கு 11.12.2024 ஆம் திகதி மாலை 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (10.02.2025) நாட்கள் வரை செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை வங்கிப் பிணையாக மாத்திரம் செலுத்த முடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| PSDG/NP/MU/PTKPS/SOLARLIGHT/2024/08 | Purchasing & Fixing of Solar Lights | 0.920 | 30 நாட்கள் | வட மாகாண விநியோகஸ்தர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டவர்கள் | 9,200.00 | 10/03/2025 |

11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 02.12.2024 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்து கொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு ,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

(C-1661) 27.11.2024

# அநுர சீனா விஜயம்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு சீனாவிற்கு விஜயம் செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் டிசம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் ஜனாதிபதி இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளதுடன் விஜயம் மேற்கொள்ளும் திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் சீன தூதரகத்தில் இருந்து அவரை சீனாவுக்கு வருமாறு அழைப்பு வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# ஜனவரி 9 இல் வரவு- செலவுத்திட்டம்

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் ஜனவரி மாதம் 9ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதன் இரண்டாம் வாசிப்பு பெப்ரவரி 17ஆம் திகதியும் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் மார்ச் 21 ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளது.

இதேவேளை, சந்தையில் நிலவும் நாட்டு அரிசியின் தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்தவும் அரிசியின் விலையைக் கட்டுப்படுத்தவும் அரிசி இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து 70,000 மெற்றிக் தொன் ஸ்வர்ண நாடு அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி-8)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615671 9
WESTERN UNION WU MoneyGram. Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இஸ்ரேல்-ஹிஸ்புல்லா இடையில் போர் நிறுத்தம்

## ஆராய்கிறது இஸ்ரேலிய அமைச்சரவை



(ஜெருசலேம்)

ஹிஸ்புல்லா அமைப்பிற்கும் இஸ்ரேலிய படையினருக்கும் இடையிலான 60 நாள் போர் நிறுத்த திட்டத்திற்கு அனுமதி வழங்குவது குறித்து இஸ்ரேலின் போர்க்கால அமைச்சரவை ஆராயவுள்ளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ் இஸ்ரேல் லெபனானில் இருந்து தனது படைகளை விலக்கிக்கொள்ளும். அதே வேளை ஹிஸ்புல்லா அமைப்பு லிட்டானி ஆற்றுப்பகுதியிலிருந்து தனது உறுப்பினர்களையும் ஆயுதங்களையும் விலக்கிக் கொள்ளும்.

லிட்டானி ஆறு லெபனான் இஸ்ரேல் எல்லையிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது.

அந்த பகுதியில் லெபனான் இராணுவத்தினர் நிலை கொள்ளவுள்ளனர்.

யுத்த நிறுத்தத்தை கண்காணிப்பதற்கான ஐந்து நாடுகள் குழுவிற்கு அமெரிக்கா தலைமை தாங்கும், இந்த உடன்படிக்கையை ஹிஸ்புல்லா அமைப்பு மீறுவதாக கருதினால் அதன் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான கடிதத்தை அமெரிக்கா வழங்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-8)

# ட்ரம்ப் மீதான வழக்கு தள்ளுபடி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் மீதான குற்றவியல் வழக்கை அமெரிக்கா நீதிமன்ற நீதிபதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளார். அவர் மீது பல குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. தீர்ப்பளிக்கப்படாத பல குற்றவியல் வழக்குகள் உள்ள ஒருவர் அமெரிக்க ஜனாதிபதியாவது இதுவே முதல் முறை. அவர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகள் மற்றும் குற்ற வழக்குகள், தள்ளுபடி செய்யப்படுமா என்ற கேள்வி எழுந்தது.

அந்த வகையில், 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாற்றிய மைக்க முயன்றதாக ட்ரம்ப் மீது வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது. அதுமட்டுமின்றி அரசின் ரகசிய ஆவணங்களைச் சேமித்து வைத்திருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. சமீபத்தில், ரகசிய ஆவணங்களைச் சேமித்து வைத்திருந்ததாக தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் முடிவை மாற்றியமைக்க முயன்றதாக ட்ரம்ப் மீதான வழக்கை தள்ளுபடி செய்யுமாறு, சிறப்பு வழக்கறிஞர் ஜாக் ஸ்மித் கோரிக்கை விடுத்திருந்தார். அவர் மனுவில், "ஜனாதிபதியிடம் விசாரணை நடத்த அமெரிக்க நீதித்துறைக் கொள்கையில் அனுமதி இல்லை" என குறிப்பிட்டு இருந்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி, ட்ரம்ப் மீதான குற்ற வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். (நி-8)

# பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வீடு தான் ஆபத்தான இடம்

## ஐ.நா அதிர்ச்சி அறிக்கை

(ஜெனீவா)

ஒரு நாளைக்கு சராசரியாக 140 பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்களது இணையர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்பட்டதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வீடுதான் மிகவும் ஆபத்தான இடமாக மாறியுள்ளது எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நவம்பர் 25 ஆம் திகதி ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஐ.நா. கிளை அமைப்புகளான ஐ.நா., பெண்கள் மற்றும் ஐ.நா.வின் போதைப்பொருள், குற்றச் செயல்கள் தடுப்பு அமைப்பு சார்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

இதேவேளை உலகளவில், 2023 ஆம் ஆண்டில் 51,100 பெண்கள், சிறுமிகளின் உயிரிழப்புக்கு இணையர் அல்லது உறவினர் காரணமாக இருந்துள்ளனர் என்றும் 2022 ஆம் ஆண்டில் 48,800 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் ஆபிரிக்காவில் 2023 ஆம் ஆண்டில் 21,700 பேர் தங்களது இணையர் மற்றும் உறவினரால் கொல்லப்பட்டுள்ளனர் ஆப்பிரிக்கா மக்கள் தொகையின் அளவோடு ஒப்பிடும்போது அதிக எண்ணிக்கையிலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது 100,000 பேருக்கு 2.9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் கடந்த ஆண்டு அமெரிக்காவில் 100,000 பெண்களும், ஓசியானியாவில் 100,000 பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# இம்ரா…

# போர்க்…

- ❖ஐவர் உயிரி…
- ❖பொலிஸ் வ…
- ❖கண்ணீர் பு…

(இஸ்லாமாபாத்) -

பாகிஸ்தான் சிறை…

கானை விடுதலை செ…

அப்தலில் அவரது …

இஸ்லாமாபாத்…

நடத்தினார். இந்தப்…

உயிரிழந்தனர்.



இந்தப் பேரணியில் பலர் காயமடைந்தனர். மேலும் போராட்டக்காரர்கள் பொலிஸ் வாகனங்க…

ளுக்…

போ…

கண…

# இராணுவ வேலையை தவிர்க்க உடல் எடையை அதிகரித்த இளைஞன்

## பிடித்து ஜெயிலில் போட்ட அரசு

(சியோவ்)

தென் கொரியாவில் 18 வயது முதல் 35 வயதுக்குள் இருக்கும் உடல் தகுதி உள்ள ஆண்கள் குறைந்தது மூன்று ஆண்டுகள் கட்டாயம் இராணுவத்தில் சேவை செய்ய வேண்டும் என்ற சட்டம் உள்ளது. ஆனால் இராணுவ வேலையில் இருந்து தப்பிக்க 26 வயது இளைஞர் ஒருவர் தனது உடல் தகுதியை குறைக்க திட்டமிட்டு அதிகம் சாப்பிட்டு வந்துள்ளார்.

இதன்மூலம் உடல் எடை அதிகரித்து இராணுவ சேவை புரிவதற்காக உடல் தகுதி இல்லாமல் போய்விடும் என்பது அவரது மாஸ்டர் பிளான். இந்த திட்டத்தின் படி மானாவாரியாகச் சாப்பிட்டு 102 கிலோ வரை தனது இயல்பான எடையை மூன்றே மாதங்களில் அவர் அதிகரித்துள்ளார்.

அவரது பாடி மாஸ் இண்டக்ஸ் BMI 37.8 வரை அதிகரித்துள்ளது. இது ஒபிசிட்டி எனப்படும் உடல் எடை அதிகம் என்பதை நிர்ணயிக்கும் அளவாக உள்ளது. ஆனால் இந்த திட்டத்தை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவர் இராணுவ சேவையை தவிர்க்க முயற்சித்த குற்றத்திற்காக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்.

இந்த குற்றத்துக்கு 3 வருடம் தண்டனை வழங்கலாம் என்ற நிலையில் முதல் முறையாக அவர் குற்றம் புரிந்துள்ளதாலும், இராணுவத்திற்கு உண்மையாகச் சேவை செய்வேன் என்று வாக்குறுதி அளித்ததாலும் அவருக்கு 2 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் அவர் தினமும் இரண்டு மடங்கு உணவை



உட்கொள்ள உதவிய அவரது நண்பருக்கு 6 மாதம் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அவர் விளையாட்டாக இந்த திட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ரான்கான் ஆதரவாளர்களால்
# ர்க்களமான இஸ்லாமாபாத்!

## உயிரிழப்பு
## ஸ் வாகனங்களுக்கு தீ வைப்பு
## ணீர் புகைக்குண்டு வீச்சு



**பாத்)**

**ர் சிறையில் உள்ள முன்னாள் பிரதமர் இம்ரான் லை செய்யக்கோரி பஞ்சாப் மாகாணம் ஹசன் அவரது ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் பாத்தை நோக்கி பிரம்மாண்ட பேரணி இந்தப் பேரணியில் ஏற்பட்ட மோதலில் 5 பேர் ர்.**



காய
ட்டக்
ங்க

ளுக்கு தீ வைத்து எரித்தனர். போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முயற்சித்தனர். இதனால் அப்பகுதியே போர்க்களம் போல் காட்சியளித்தது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மீது ஊழல் வழக்கு உட்பட ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். பாகிஸ்தான் தலைவர்களுக்கு வெளிநாட்டு தலைவர்கள் அளிக்கும் பரிசு எல்லாம் அரசு கருவூலத்துக்கு சென்று விடும்.

அவ்வாறு வழங்கப்பட்ட விலை உயர்ந்த ஆபரணம் ஒன்றை, இம்ரான் கான் பிரதமராக இருந்த போது அரசு கருவூலத்துக்கு குறைந்த பணம் செலுத்தி முறைகேடான வழியில் எடுத்துக் கொண்டதாக ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் இம்ரான் கானுக்கு கடந்த நவம்பர் 20 ஆம் திகதி ஜாமீன் வழங்கியது.

இந்த ஜாமீன் கிடைத்த சில மணி நேரத்தில், தீவிரவாதம் மற்றும் இதர வழக்குகளில் இம்ரான் கானை ராவல்பிண்டி பொலிஸார் கைது செய்தனர்.

ராவல் பிண்டியில் உள்ள அடியலா சிறையில் இம்ரான்கான் இருந்த போது, கடந்த செப்ரெம்பர் 28 ஆம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததாக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இம்ரான் கான் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். தீவிரவாத தடுப்பு சட்ட விதிமுறை மீறல், அரசு தடையை மீறி பொது இடத்தில் கூடுதல், பொலிஸாரை கடமையை செய்யவிடாமல் தடுத்தது, பொலிஸ் வாகனங்கள் மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தியது என பல குற்றச்சாட்டுகள் இந்த வழக்கில் இம்ரான் கான் மீது சுமத்தப்பட்டுள்ளன.

லாகூர், ராவல்பிண்டி மற்றும் இஸ்லாமாபாத் ஆகிய நகரங்களில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் இம்ரான் கான் மீது 62 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பஞ்சாப் மாகாணத்தில் அவர் மீது 54 வழக்குகள் உள்ளன. அனைத்து வழக்குகளிலும் இருந்தும் இம்ரான் கானுக்கு ஜாமீன் வழங்க வேண்டும் என இம்ரான் கானின் சகோதரி நூரின் நியாசி தாக்கல் செய்த மனுவை லாகூர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. இதனால் இம்ரான் கான் இப்போது விடுதலையாவதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லை என கூறப்படுகிறது.

இம்ரான் கான் மீதான வழக்குகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என இம்ரான் கானின் பிடிஐ கட்சி தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (நி-8)

---





தவிய அவ
த 6 மாதம்
னை விதிக்
வர் விளை
திட்டத்தை

சொன்னார் ஆனால் நிஜமாகவே செய்வார் என்று நினைக்கவில்லை என்று பிற நண்பர்கள் வாக்கு மூலம் அளித்துள்ளனர். (நி-8)

---

## மெக்சிகோ, கனடா, சீனா மீது கூடுதல் வரி விதிக்கும் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், சீனா மற்றும் அண்டை நாடுகளான கனடா, மெக்சிகோ மீது கூடுதல் வரிகளை விதிக்கும் உறுதிமொழியை அளித்தார்.

சீனாவில் இருந்து வரும் பொருட்களுக்கு 10 சதவீத கூடுதல் வரி விதிப்பதாகவும் மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து வரும் அனைத்து பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிப்பதாகவும் ட்ரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார்.



புலம்பெயர்ந்தோர் மற்றும் எல்லைகளைத் தாண்டி வரும் சட்டவிரோத போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான புதிய வரிகளை அவர் விதித்தார்.

இந்த வரி விதிப்பானது 2025 ஜனவரியில் ட்ரம்ப் ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்றவுடன் அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் மன்னாரில் அதிகரிக்கும் இடப்பெயர்வுகள்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை வரை 12 ஆயிரத்து 485 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 879 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 16 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. உயர்தர பரீட்சைக்கான மத்திய நிலையங்கள் இல்லாத பாடசாலைகள் மற்றும் மதஸ்தலங்கள், பொது மண்டபங்கள் இவ்வாறு தற்காலிக பாதுகாப்பு நலன்புரி நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. குறித்த நலன்புரி நிலையங்களில் 419 குடும்பங்களைச் சேர்ந்த 1426 நபர்கள் இவ்வாறு தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். மழை வெள்ள நீரை கடலுக்கு வெளியேற்றும் நடவடிக்கைகளும் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது..

அனர்த்தங்கள் ஏற்பட்டால் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள முப்படையினரும் தயார்படுத்தப்பட்டுள்ளனர். தற்போது தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றமையினால் மக்களின் இடப்பெயர்வு அதிகரிக்கும் என தெரிய வருகிறது. (நி-8-285)

# வெள்ளத்தில் முறிகண்டி



(முறிகண்டி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களான முறிகண்டி, வசந்தநகர், செல்வபுரம் உள்ளிட்ட பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

சில வீடுகளிற்குள் வெள்ளநீர் உட்சென்றுள்ளதுடன் உள்ளக போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. (நி-8-100)

# மட்டக்களப்பில் மினி சூறாவளி தூக்கி வீசப்பட்ட படகுகள்

## 7 வீடுகள் சேதம்



(மட்டகளப்பு)

மட்டக்களப்பு - வாகரை பிரதேச சபைக் குட்பட்ட மாங்கனி பகுதியில் மினி சூறாவளி ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணி யளவில் ஏற்பட்ட இந்த மினி சூறாவளியில் அப்பகுதியிலுள்ள "லிவிங் கிறிஸ்டியன் அசம்பிலி" எனப்படும் தேவாலயம் முற்றாக பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி இவ்வனர்த்தத்தில் 7 வீடுகள் பாதிப்படைந்துள்ளன.

கடற்கரையில் நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு படகுகள் கரைக்கு அப்பால் தூக்கியெறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

# யாழில் கனமழை

## 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாதிப்பு



வெள்ளத்தில்நயினாதீவு தெற்கு பெருங்குளம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் கன மழை காரணமாக யாழ். மாவட்டத்தில் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, உடுவில், கோப்பாய், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, சங்கானை, காரைநகர், நெடுந்தீவு, தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிக பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

மாவட்டத்தில் இதுவரை 2040 குடும்பங்களைச் சேர்ந்த 7,436 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8-33)

# குடியிருப்புக்குள் புகுந்த முதலை



(கரணவாய்)

உடுப்பிட்டி பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த முதலையினை அவதானித்த மக்கள் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலையில் முதலையை கண்டுகொண்ட நிலையில் அப்பகுதி இளைஞர்களால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வல்வெட்டித்துறை பொலிஸாரி னூடாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலையை அகற்றும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (6-8-60)

# ஈ.பி.டி.பியிலிருந்து விலகிய முன்னாள் எம்.பி திலீபன்

(குருமன்காடு)

முன்னாள் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா நிர்வாக செயலாளருமான குலசிங்கம் திலீபன் கட்சியில் இருந்தும் அதன் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் வெளியேறுவதாக நேற்று முன்தினம் அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளாதவது,

தற்போது நடைபெற்ற 2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளே கிடைக்கப்பெற்றன. இது வரை காலமும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவை யாற்றினேன்.

சில விடயங்கள் காரண மாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து விலகு கிறேன். இது தொடர்பான கடிதத்தினை கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன். மேலும் எனது தனிப்பட்ட முடிவு என்பதைத் தெரிவித்துள்ளேன் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-8-250)

# வல்வெட்டித்துறை பகுதியில்

## பிரபாகரனின் அகவை தின கொண்டாட்டம்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்த தினமான நேற்று வல்வெட்டித் துறையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

வல்வெட்டித்துறை ஆலடி பகுதியில் அமைந்துள்ள அவரது பூர்வீக வீடு அமைந்திருந்த காணிக்குள் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எம். கே சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதன் போது கேக் வெட்டி பிறந்த தினத்தினை கொண்டாடி யதுடன், மர நடுகைகளும் முன்னெடுக்கப்பட்டது. (நி-6-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே எங்கே ஒரு தரம் விழிகளை இங்கே திறவுங்கள்...!

## சாகவிடமாட்டோம்

வாழ்ந்து சாகும் மானிடத்தில்
செத்தும் வாழ்கின்றார் மாவீரர்-அவர்
வித்துடல் விதைந்துள்ள இடத்திலே
வந்துநெய் விளக்கினை ஏற்றுக!
அவர் தந்த பெரும் வரங்களைப்
போற்றுக!!

கையெடுத்துக் கும்பிட்ட கடவுள்களும்
எம்மைக் கைவிட்ட போதிலும்
கண்ணுக்குள் எமை வைத்து
கடைசி வரை அடைகாத்து...

மண்ணுக்குள் உறங்கும்-எம்
கண்மணிகாள்!

உங்கள் வரலாறு ஒன்றே
எங்களுக்குப் போதும், அதுவே
எம் வருங்கால சந்ததிக்கு
சாட்சியம்!

அதுவே இவ் வையகத்தில்-தமிழன்
தலை நிமிர்ந்து நடப்பதற்கான அடையாளம்!!

மானம் காத்த மறவரே!
உன் கல்லறையில் கையடித்துச்
சத்தியம் செய்கின்றோம்!
இந்த வானமும் பூமியும் உள்ளவரை
உங்களைச் சாகவிடமாட்டோம்
சாகவிடமாட்டோம்
இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

புதுவை அன்பன்





## உதிரம் நிறைந்த வாரம்

மண்ணில் விதைத்த விதைகள் யாவும்
மலராய் கண்முன் மலர்ந்திட இன்று

தாயகம் காத்த தேசிய புதல்வரை
நினைத்திடும் வரமும் கிடைத்தது இன்று

உதிரம் நிறைந்த உத்தமர் தேசம்
உலகில் மறைந்து போனது ஏனோ?

காலம் மறந்த காவியம் யாவும்
கண்முன் தெரிந்து நினைவுகள் மீட்க

தாய்மண் தவழ்ந்த எம்மவர் யாவும்
கல்லறை கனவாய் போனது ஏனோ?

எம் இன வீரம் மறந்திடும் தமிழன்
உலகில் வாழ்வது ஏளனம் என்பேன்

மறைந்த மாவீரம் மறந்து போடும்
துயரினை தடுத்து நிறுத்திடு தமிழா

கார்த்திகை மலரில் உறைந்திடும்
நினைவுகள்
அறிந்திடு இன்றே எம் இன மகனாய்

உதிரம் நிறைந்த எம் இன வாரம்
உணர்ந்திடும் உலகில் தமிழ் இன வீரம்

ந.விதுஷன்,
கற்கோவளம்.

## கல்லறை கீதம்

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! - இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் - அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் - உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்

சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது - எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் - அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்

தலைவனின் பாதையில் தமிழினம்
உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் - எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

பாடலாசிரியர்: புதுவை இரத்தினதுரை
இசை-கண்ணன் மாஸ்ரர்
பாடியவர்- வர்ண ராமேஸ்வரன்

## மாவீரர்களின் பெற்றோர்கள் முல்லையில் கௌரவிப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் மாவீரர்களின் பெற்றோர் களை கௌரவிக்கும் நிகழ்வானது தண்ணீரூற்று பரி.மத்தியா முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

முள்ளியவளை, கூழாமுறிப்பு, சிலாவத்தை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களே நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தி யத்துடன் அழைத்து வரப்பட்டு முதல் நிகழ்வாக உயிர்த் தியாகம் செய்த மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகத்தின் தலைவர் தீபனால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் மாவீரர்கள் இந்த மண்ணிற்கு ஆற்றிய உயிர்த்தியாகம் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றதுடன் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான மரக்கன்று களும் வழங்கப்பட்டன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 641





ஐயா! என் தமையனைக் காப்பாற்றும் இரும்புக் கவசம் போல் நீர் உதவவேண்டும். அவசியமானால் நந்தினி யார் என்பதை என் சகோதரனிடம் சொல்லிவிட வேண்டும். அதை அவர் நம்ப வேண்டுமே?"

"நம்பும்படியாகச் சொல்வது உமது பொறுப்பு. எப்படிச் செய்வீர் என்று எனக்குத் தெரியாது. அவர்களை எப்படியேனும் சந்திக்க முடியாதபடி செய்தால் மிக்க நலமாயிருக்கும்."

"தேவி! என்னாலியன்ற முயற்சிகளைச் செய்து பார்க்கிறேன். தோல்வி அடைந்தால் என்னைக் குற்றம் சொல்ல வேண்டாம்" என்றான் வந்தியத்தேவன்.

ஐயா! தாங்கள் தோல்வி அடைந்தாலும் வெற்றி அடைந்தாலும் என் இதயச் சிறையிலிருந்து இந்த ஜென்மத்தில் தங்களுக்கு விடுதலை கிடையாது! என்றாள் அரசிளங்குமரி.

### 31 ஆம் அத்தியாயம்
### பசும் பட்டாடை

மறுநாள் காலையில் வந்தியத்தேவன் முதல் மந்திரி அநிருத்தரின் ஓலையுடன் அரிசிலாற்றங்கரையோடு குடந்தை நகரை நோக்கிப் போய் கொண்டிருந்தான். குதிரையை விரட்டாமல் மெல்லச் செலுத்திக் கொண்டு இருபுறமும் தோன்றிய இனிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டு போனான். ஐப்பசி மாதத்தின் ஆரம்பத்தில் சோழ வளநாடு பூரணப் பொலிவுடன் விளங்கிற்று. இயற்கை அரசி பச்சைப் பட்டாடை உடுத்தி நவயௌவன சௌந்தரியத்துடன் திகழ்ந்தாள். அந்தப் பச்சைப் பட்டாடையில்தான் எத்தனை விதவிதமான பசுமைச் சாயங்கள்! கழனிகளில் கதிர்விடுவதற்குத் தயாராயிருந்த நெற்பயிர்கள் ஒரு சாயல் நடவு நட்டுச் சில காலமாகியிருந்த இளம் பயிர்கள் இன்னொரு சாயல் அப்போதுதான் நடவாகியிருந்த பசும் பொன்னிறப் பயிர்கள் வேறொரு சாயல்! ஆல மரத்தில் தழைத்திருந்த இலைகள் ஒரு பசுமை. அரச மரத்தில் குலுங்கிய இலைகள் இன்னொருவிதப் பசுமை. தடாகங்களில் கொழு கொழுவென்று படர்ந்திருந்த தாமரை இலைகளில் மோகனப் பசுமை வாழை இலைகளின் கண்கவரும் பசுமை.தென்னங் குருத்துக்களின் தந்தவர்ணப் பசுமை பூமியில் இளம் புல்லின் பசுமை ஓடைகளில் தெளிந்த நீரின் பசுமை. நீரில் அங்குமிங்கும் தத்திப் பாய்ந்த தவளைகளின் பசுமை.

இவ்வளவு விதவிதமான சாயல்கள் வாய்ந்த பச்சைப் பட்டாடையின் அழகைத் தூக்கிக்காட்டுவதற்கென்று நட்சத்திரப் பொட்டுக்கள் பதித்ததுபோல் குவளைகளும், குமுதங்களும், செந்தாமரை செங்கழுநீர்ப் பூக்களும் ஆங்காங்கு ஜொலித்துக் கொண்டிருந்தன. இந்த அழகையெல்லாம் வந்தியத்தேவன் இரு கண்களாலும் பருகிக் கொண்டு பிரயாணம் செய்தான்.

ஆடிமாதத்தில் அந்த வழியாக அவன் சென்ற போது பார்த்த காட்சிகளுக்கும் இப்போது காணும் காட்சிகளுக்கும் உள்ள வேற்றுமையை அவன் உணர்ந்திருந்தான். ஆடிமாதத்தில் ஆற்றில் புதுவெள்ளம் நொங்கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது. இப்போதோ பிரவாகத்தின் வேகமும் கோபமும் தணிந்து செந்நிறம் மாறி, பளிங்கு போல் தெளிந்து உல்லாசமாகப் பவனி சென்றது. புது வெள்ளத்தின் 'ஹோ' என்ற இரைச்சலும் மேலக் காற்று மரக்கிளைகளைத் தாக்கிய போது உண்டான பேரோசையும் ஆயிரமாயிரம் புள்ளினங்களின் கோலாகலத் தொனிகளும் அப்போது ஒரு மாபெருந் திருவிழாவின் ஆரவாரத்தைப் போல் கேட்டன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சந்தேகப் பிராணி!



வியாபாரத்தை முன்னிட்டு ஒரு தடவை முல்லா பெரிய நகரம் ஒன்றுக்குச் சென்றிருந்தார். அங்கே அவருக்குத் துணையாக ஒருவன் வந்து சேர்ந்தான். அவனுக்கு எடுத்ததற்கெல்லாம் சந்தேகமாக இருந்தது. அந்தப் பெரிய நகரத்தைப் பார்த்ததும் அவனுக்குப் பிரமிப்பாக இருந்தது.

சந்து பொந்தெல்லாம் மக்கள் இவ்வாறு நிரம்பி வழிகிறார்களே இவ்வளவு கூட்டத்தில் மக்கள் எவ்வாறு தாங்கள் போக வேண்டிய இடத்தை அடையாளம் கண்டு கொள்வார்கள். தாங்கள் தங்கியுள்ள விடுதியை எவ்வாறு கண்டு பிடிப்பார்கள்? அவ்வளவு ஏன் மக்கள் தங்களைத் தாங்களே கூட அடையாளம் கண்டு கொள்வது சிரமந்தான். இவ்வாறெல்லாம் அந்த சந்தேகப்பிராணி பேசிக் கொண்டேயிருந்தான்.

அந்த சந்தேகப் பிராணியும் முல்லாவும் அன்று இரவைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் தங்கினார். அந்த விடுதியில் பலர் தங்கியிருந்தார்கள். காலையில் நான் கண் விழிக்கும் போது என்னையே மறந்து விட்டால் என்ன செய்வது? முல்லா அவர்களே எனக்கு ஒரு யோசனை சொல்லுங்கள் என்று பரிதாபமாகக் கேட்டான் சந்தேகப்பிராணி.

முல்லா சிரித்துக் கொண்டே நண்பரே கவலைப்படாதீர். ஒரு கறுப்புத் துணியை உமது ஒரு காலில் சுற்றிக் கட்டி விடும்.

காலையில் உறங்கி எழுந்ததும் உமது காலைப் பாருங்கள். கறுப்புத் துணி உன் காலில் இருந்தால் நீ தான் அது என்ற அடையாளம் கண்டுகொள்ளலாம் என்றார். சந்தேகப்பிராணிக்கு அது நல்ல யோசனையாகப் படவே தன் காலில் ஒரு கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டு படுத்து விட்டான். அவனுக்கு அருகே படுத்திருந்த முல்லா அவன் நன்றாக உறங்கிய பிறகு அவன் கட்டியிருந்த கறுப்புத் துணியை அவிழ்த்துத் தம்முடைய காலில் கட்டிக் கொண்டார்.

காலையில் எழுந்தவுடன் ஐயோ நான் காணாமல் போய்விட்டேனே. என் காலில் இருந்த துணியைக் காணோமே என்று கூக்குரல் போட்ட சந்தேகப்பிராணி முல்லாவின் காலைப் பார்த்துவிட்டு நான் அகப்பட்டுவிட்டேன் நீ தான் நான் என்று சத்தம் போட்டான். அங்கே ஏதோ குழப்பம் நடப்பதைக் கண்ட மற்ற பயணிகள் அங்கே வந்து கூடி என்ன நடந்தது என வினவினர். நடைபெற்ற நிகழ்ச்சிகளை முல்லா மற்றவர்களுக்கு விளக்கினார். சந்தேகப்பிராணியைப் பார்த்து அந்த விடுதியில் தங்கியிருந்த எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தனர். பிறகு முல்லா அந்தச் சந்தேகப்பிராணிக்கு ஏற்பட்டிருந்த சந்தேகப்பிரமையை அகற்றி அவனுக்குத் தெளிவை உண்டாக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை.. வரலாறு ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை. – காமராஜர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாவீரர்களின் தியாகத்தை ஒரு பாடமாகப் போதியுங்கள்

இன்று மாவீரர் நாள். சந்தனப்பேழைகளில் துயிலுகின்ற எம் வீரமறவர்கள் விழித்தெழுந்து தங்கள் உறவுகளுடன் மௌனமாகப் பேசுகின்ற திருநாள்.

தமிழுக்காகவும் தமிழினம் உரிமை பெற்றுச் சுதந்திரமாக வாழ்வதற்காகவும் தங்கள் இன்னுயிரை ஈகை செய்த மாவீரர்களின் தியாகத்தை மனித மொழிகளால் கூறிவிட முடியாது.

ஆம், தலைவன் இட்ட கட்டளையை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்வதை பேறாகக் கருதியவர்கள் நம் மாவீரர்கள்.

அவர்கள் தமிழ் இனத்தை – தமிழ் மொழியை – தமிழ் மக்களை தங்கள் உயிரிலும் மேலாக நேசித்தனர்.

அவர்களின் தியாகத்தை – வீரத்தை – ஒழுக்கத்தை – தலைவன் மீது கொண்ட உயர்ந்த அன்பை சங்க கால இலக்கியங்களில் சுவடக் கண்டுவிட முடியாது.

அந்தளவுக்கு அவர்களின் தியாகம் உன்னதமானது.

அத்தகைய மாவீரர்களின் பெரும் தியாகம் நடந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பதால் – அந்தத் தியாகத்தை நிஜமாக அனுபவித்தவர்கள் நாம் என்பதால், எமக்கொரு பாரிய கடமைப்பாடு உண்டு.

அதாவது எங்கள் மாவீரர்களின் தியாகத்தை – வீரத்தை இனிவரும் நம் இளம் சமூகம் எப்படி உள்வாங்கிக் கொள்ளும் என்பதை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உண்மை. மகாத்மாகாந்தி இறந்தபோது சீனத்து அறிஞன் சொன்னான்; காந்தி என்றொரு மனிதன் வாழ்ந்திருக்க முடியாதென்று நம் எதிர்காலச் சந்ததி கூறும் என.

அப்படித்தான் எங்கள் மாவீர்களின் வீரத்தை, அவர்களின் தியாகத்தை, தமிழ் மண் மீது அவர்கள் கொண்ட பாசத்தை எங்கள் எதிர்காலச் சந்ததியும் அது ஒரு கற்பனை என்றே கருதிக் கொள்ளும்.

அந்தளவுக்கு எங்கள் மாவீர்களின் தியாகம் முன்பு நடந்ததுமில்லை. இனி நடக்கப் போவதுமில்லை.

ஆகையால்தான் கூறுகின்றோம். எங்கள் மாவீரர்களின் வரலாற்றை நம் பிள்ளைகள் படித்தறிய வேண்டும். அவர்களுக்கு அதை ஒரு பாடமாகக் கூறிவைக்க வேண்டும்.

இதை நாம் கூறுவதற்கு மூல காரணம் நம் இளம் பிள்ளைகள், மாணவர்கள் எங்கள் இனத்தின் விடுதலைப் போராட்டம் பற்றியோ, அந்தப் போராட்டத்தில் எங்கள் பிள்ளைகள் தம் இன்னுயிரைத் தியாகம் செய்ததையோ அறிந்து கொள்வதில் ஆர்வமற்றவர்களாக உள்ளனர். இஃது மிகவும் வேதனைக்குரியது.

ஆம், இந்திய தேசத்தின் விடுதலைப் போராட்ட வீரர்களை இன்னமும் அந்த மக்கள் போற்றித் துதிக்கின்றனர். வீரசிவாஜியை மகாராஷ்டிர மக்கள் தங்கள் வாழ்விடங்கள் முழுமையிலும் வைத்து வழிபடுகின்றனர்.

தங்கள் தேசத்துக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த தலைவனை தங்களின் மீட்பராகப் போற்றுவது அந்த மக்களின் நன்றி உணர்வைப் பிரதிபலிப்பதாகும்.

ஆக, நாமும் எங்கள் மாவீரர்களின் தியாகத்தை எடுத்துரைப்போம்.

ஏனெனில் எங்கள் தமிழ்த் தேசத்தையும் தமிழ் இனத்தையும் எம் இளம் சமூகம் போற்றித் துதிப்பதற்கு இது மிகவும் அவசியமாகும்.

# இனவாதம் நாட்டில் தலை தூக்குவதாக தெரிவிக்கப்படுவதில் உண்மை இல்லை

## சபாநாயகர் அசோக்க ரன்வல

(கொழும்பு)

நாட்டில் இனவாதப் பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்குவதாக ஊடகங்கள் வெளியிட்டாலும் அவ்வாறான எந்த விடயமும் நடைமுறையில் இடம்பெற்றதாகத் தகவல் இல்லை. அவ்வாறான சம்பவம் உண்மையாக இடம்பெறுமாக இருந்தால் அதனை இல்லாமல் செய்வதற்கு பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கும் என சபாநாயகர் அசோக்க ரன்வல தெரிவித்தார்.

சபாநாயகர் நேற்று செவ்வாய்க்கிழமை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,நாட்டில் இனவாதப் பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்குவதாக ஊடகங்கள் வெளியிட்டாலும் அவ்வாறான எந்த விடயமும் நிஜத்தில் காணக்கூடியதாக இல்லை.

உண்மையாக அவ்வாறான சம்பவம் இடம்பெறுமாக இருந்தால் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் கலந்துரையாடி, அதனை இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று வடக்கில் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுவது தொடர்பில் எந்தக் கருத்தாடலும் நாட்டுக்குள் இருப்பதாக தெரியவில்லை. சாதாரணமாக இடம்பெறும் நிகழ்வே இடம்பெறுவதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

கடந்த காலங்களில் மேற்கொண்டது போன்று மீண்டும் செயற்படுவார்கள் என நாங்கள் நினைக்கவில்லை. வடக்கு மக்கள் தொடர்பில் எங்களுக்கு உண்மையான நம்பிக்கை இருக்கிறது.

அவர்களின் எதிர்பார்ப்பாக இருப்பது, தங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதாகும்.

அத்துடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, பாராளுமன்றத்தில் முதல் நாள் அமர்வின்போது செயற்பட்ட விதம் தொடர்பில், அவர் தனது கவலையைத் தெரிவித்திருந்தார்.

அவர் ஒரு புதிய உறுப்பினர் என்றவகையில், தவறுதலாகவே எதிர்க்கட்சித் தலைவரின் ஆசனத்தில் அமர்ந்ததாகவும் வேண்டுமென்று அவ்வாறு செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் இந்தச் சம்பவம் தொர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் மிகவும் முன்மாதிரியாக நடந்து கொண்டு, அவரின் பெருந்தன்மையை வெளிப்படுத்தி இருந்தார், இதனையே நாங்கள் பாராளுமன்றத்தில் எதிர்பார்க்கிறோம்.

அதனால் இந்தச் சிறிய விடயத்தைப் பெரிதாக்கி, இதனை நாட்டின் பிரதான பிரச்சினையாக்க நாங்கள் முற்படக்கூடாது. அர்ச்சுனா எம்.பி தன்னால் ஏற்பட்ட தவறை உணர்ந்து, அதற்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்றார். (ம-7)

# அர்ஜுன மகேந்திரனுக்கு அழைப்பாணை

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம் மூலம் அரசாங்கத்திற்கு 10 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டம் ஏற்படுத்தியதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே, 2025 பெப்ரவரி 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு முன்னாள் மத்திய வங்கி ஆளுநருக்கு அழைப்பாணை உத்தரவைப் பிறப்பித்தார். (ம-7)

# வவுனியாவில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு

## இரண்டு நாட்கள் விடுமுறை

சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு இரண்டு நாட்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு நவம்பர் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் விடு முறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7, 250)

# ஜனாதிபதியின் கொள்கை பிரகடனம் தொடர்பில்

## பாராளுமன்றத்தில் விவாதம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனம் மீதான விவாதத்தை இரண்டு நாட்களுக்கு நடத்துவதற்குப் பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, அடுத்த மாதம் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்படவுள்ளது. பாராளுமன்றத்தின் முதலாவது கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அங்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பில் இரண்டு நாட்கள் விவாதம் நடத்தவும், அதன் பின்னர் வாக்கெடுப்பு நடத்தவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

டிசம்பர் 3ஆம் திகதி முதல் பாராளுமன்ற வாரத்தை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் இணக்கம் காணப்பட்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக இடைக்கால நியமக் கணக்குத் தொடர்பான பிரேரணையை எதிர்வரும் 5ஆம் மற்றும் 6ஆம் திகதிகளில் விவாதம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நியமக் கணக்குத் தொடர்பில் வாக்கெடுப்புக்குச் செல்லவுள்ளதாகக் கட்சித் தலைவர்கள் அங்கு குறிப்பிட்டுள்ளனர்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை அரசு அலுவல்களை நடத்த இடைக்கால தரக் கணக்கில் இருந்து பணம் ஒதுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# மேலதிக வகுப்புக்களைத் தடைசெய்ய தீர்மானிக்கப்படவில்லை - அமைச்சர் நலிந்த

(கொழும்பு)

மேலதிக வகுப்புக்களை தடை செய்யத் தீர்மானிக்கப்படவில்லை என அமைச்சரவை ஊடகப் பேச்சாளரான. அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அவர், கல்வி விரிவான சீர்திருத்தத்திற்குள் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் விஞ்ஞாபனத்தில் கல்வியின் நவீனமயமாக்கல் மற்றும் விரிவாக்கம் தொடர்பிலான விடயங்கள் முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன்படி, முறையான கலந்துரையாடலின் பின்னர், ஒட்டுமொத்தப் பரீட்சை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

கல்வி தொடர்பான மாற்றங்களை அரசு மிகுந்த கவனத்துடன் எடுக்கும் என்றும், துறைசார்ந்தோரிடம் கலந்தாலோசித்து நிரந்தர முடிவு எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை 01 - 30, 2024**

**"பசிய காடுகள் இயற்கையின் படைப்பு பாலை வனங்கள் மனிதனின் படைப்பு."**

**கவிஞர் இன்குலாப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சீரற்ற வானிலையால்

# பதுளை மாவட்டம் கடுமையாகப் பாதிப்பு

(பதுளை)

சீரற்ற வானிலை காரணமாக பதுளை மாவட்டத்தில் பல வீதிகள் தடைப்பட்டுள்ளதாக பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நிலச்சரிவு, மண்மேடு சரிந்து விழுதல், மரங்கள் மற்றும் பாறைகள் சரிந்து வீழ்ந்தமையினால் வீதிகள் தடைப்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் பதுளை பண்டாரவளை வீதி உடுவர கிரிமண்டலயத்திற்கு அருகில், ஹப்புத்தளை பெரகல வீதி, பதுளை - பசறை வீதி மூன்றாம் கம்பம், பதுளை கந்தன ஊடாக ஸ்பிரிங்வேலி வீதி ஊடாக, பதுளை பசறை வீதியின் 7 ஆம் கம்பம், பிபில லுணுகல வீதியில் அரவாகும்புர ஆகிய வீதிகள் தடைப்பட்டுள்ளன.



வீதிகள் தடைப்பட்டுள்ளதால் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு சாரதிகளை பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## நுண்ணுயிர்கொல்லிகளை கவனயீனமாக பயன்படுத்துவதை தவிர்ப்பீர்!



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நீங்களும் உங்கள் உறவுகளும் நலம்தானே, இந்த இடத்தில் வந்த நேரத்தில் சுகநலம் விசாரிக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் தற்போது சுகதேகியாக ஒருவர் இருப்பதென்பதே அதிசயமாகிவிட்டது. எமது பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் உண்ணும் உணவும் வழமையிலிருந்து மாற்றம் பெற்றாகிவிட்டது. எமது உடலுக்கு எது தேவையோ அதனை நாம் உண்ண தலைப்படவில்லை. அளவுக்கதிகமாக உண்ணுவதனால் உடலும் உப்பி நீரிழிவு நோயும் தானாகவே வந்துவிடுகின்றது. இவை தொற்றா நோய்களென அறியப்பட்டாலும் சுகநலம் விசாரிக்கும் போது அனைவரும் அதுவும் வந்துவிட்டது என குறைபட்டுக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது. உடலாரோக்கியம் என்பது மிகவும் முக்கியமானது என்பதனை சுகாதாரத் துறை எவ்வளவு சொல்லியும் எம்மால் அதனை கவனிக்க முடியாதிருக்கின்றது. வேலைக்குச் செல்லும் அனைவருக்கும் உடலை ஆரோக்கியமாக பேணுவதற்கான உடற்பயிற்சிகளை தினமும் செய்வதற்கு முடியாதிருக்கின்றது. எப்படியாவது மாற்றுவழியொன்றை கண்டாக வேண்டும் என்னும் செயலாற்றலுக்குள் வசதியாக அனைவரும் நுழைந்திருக்கின்றனர். இலகு வழியை கண்டுபிடித்தலில் காட்டும் அக்கறை உடற்சுகாதாரத்திற்கு கொடுக்கப்படவில்லை.

திடுமென வைரஸ் காய்ச்சல் வந்துவிட்டது போன்ற பிரமை. பிரமையல்ல அது வைரஸினால் வந்த காய்ச்சலே. இவ்வாறு வைரஸ் காய்ச்சல் வந்துவிட்டால் அதனுடன் சளியும் சேர்ந்துவிடும். இதன்மூலம் கழுத்துப் பகுதியில் தொற்று அதிகமாகி காய்ச்சலுக்கு வழிவகுத்துவிடும். ஆஸ்துமா நோயுள்ளவர்களுக்கு இந்த நிலைமை இன்னும் மோசமாகவே இருக்கும். இவ்வாறு வருகின்ற தொற்றுதலுக்கு வழமையாக மருத்துவர்கள் நுண்ணுயிர் எதிரியை பரிகரிப்பதுண்டு. தொற்றுதலின் தீவிரதன்மையைப் பொறுத்தும் தொற்றுதலேற்படுத்திய கிருமியின் வகையைப் பொறுத்தும் இவ்வாறான நுண்ணுயிர்கொல்லிகளை பரிந்துரைப்பார்கள். அதிலும் இதனைப் பாவிப்பதனால் வயிற்றுப் பகுதியிலிருக்கும் உணவினை பிரிந்தழியச் செய்வதில் பங்களிக்கும் நன்மை தரும் பலவகை நுண்ணங்கிகளையும் எமது சமிபாட்டுத் தொகுதி கொண்டிருப்பது நன்மைதரும் செய்தியாகும். ஆனால் இவற்றின் அளவினை நாம் மாற்றும் படி மருந்துக் குளிகைகளை பயன்படுத்தக் கூடாது. ஒருதரம் மருத்துவரிடம் தம்மை பரிசோதித்த பின்னர் பலர் தாமாகவே மருத்துவராகி அதே சிட்டையைப் பயன்படுத்தி மீண்டும் மீண்டும் நுண்ணுயிர்க்கொல்லிகளை பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். எதனையும் பரிசோதித்து பிரச்சினை உள்ள இடங்களை கண்டுபிடித்து அதற்கு நேரடியாக மருந்தினை பயன்படுத்த வேண்டும்.

மீண்டும் மீண்டும் ஒரேவகையான நுண்ணுயிர்கொல்லி [Antibiotics] பயன்படுத்தும் போது அவற்றுக்கெதிராக நுண்ணங்கிகள் தமது எதிர்ப்புசக்தியை உருவாக்கிவிடும். இவ்வாறு நுண்ணங்கியெதிரிகளை கவனயீனமாக பயன்படுத்தினால் நாளடைவில் அவற்றுக்கெதிராக நுண்ணுயிர்க்கொல்லிகள் தமது தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சக்தியை இழந்து விடுகின்றன. இந்த பிரச்சினை தவறுதலாக மருத்துவரின் சிபாரிசின்றி நாம் பயன்படுத்தும் போதே ஏற்படுகின்றது. ஆதலால் மருத்துவருடன் கலந்தாலோசித்து எந்தவகை மருந்துகளையும் பயன்படுத்துவதனை நாம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

எமது உடலில் நன்மைதரும் பல நுண்ணங்கிகள் குறிப்பாக பக்றீறியாக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக சமிபாட்டுத் தொகுதியில் இவ்வாறான நன்மைதரும் நுண்ணங்கிகள் இருப்பதனால் அவற்றை நாமாகவே தவறான மருந்துகளை பயன்படுத்தி அழித்துவிடக்கூடாது. எமது சமிபாட்டுத் தொகுதியை சுகநலமாக வைத்திருப்பதில் இவ்வாறான நன்மைதரும் நுண்ணங்கிகளின் சமநிலையை எந்தவகையிலும் குழப்பிவிடக்கூடாது.

பாரம்பரியமாக நாம் உண்ணும் உணவினில் இவ்வாறான நன்மைதரும் நுண்ணுயிர்க்கொல்லிகளை பாதுகாக்கும் சக்தி உண்டு. அதிலும் எமது பகுதிகளில் பழஞ்சோற்று தண்ணீர் அன்றைய காலங்களில் காலையுணவாக இருக்கும். எமது பாரம்பரிய நெல் இனங்களான மொட்டைக்கறுப்பன், மொறுங்கன் போன்றனவற்றின் பழஞ்சோற்றுக்கு தனித்துவமான சுவையும் அதிலுள்ள ஊட்டச்சத்தும் தற்போது காணப்படும் நெல் இனங்களில் காணப்படுவதில்லை. தற்போது வடமாகாணமெங்கும் எமது பிரதேசத்திற்குள் வந்து சேர்ந்த ஆட்டக்காரி நெல்லினமே அதிகமாக பயிரிடப்படுகின்றது. ஆனால் ஆட்டக்காரி அரிசியில் ஆக்கிய சோறு இவ்வாறு இரவில் நீரில் ஊறவிட்டு அடுத்தநாள் பழஞ்சோறாக பயன்படுத்த முடிவதில்லை. பழஞ்சோற்று தண்ணீரில் அதிகளவு நன்மைதரும் பக்றீறியாக்களை பெருகச்செய்யும் திறனுடையதால் காலையில் பழஞ்சோற்று தண்ணீர் அல்லது பழஞ்சோறு நமது உடலுக்கு ஆரோக்கியமான உணவாக காணப்படுகின்றது. இதில் வளரும் நன்மைதரும் நுண்ணுயிரிகள் எமது சமிபாட்டுத் தொகுதியை ஆரோக்கியமானதாக வைத்திருப்பதுடன் இவ்வாறான நன்மை தருவனவற்றுக்கான ஊட்டச்சத்தையும் வழங்கும் திறனுடையவை.

### இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




ஆக மொத்தத்தில் பாரம்பரியமாக நாம் பயிரிட்ட எமது பாரம்பரிய நெல்லினங்களை நாம் தொடர்ந்தும் பயிரிட்டு வருவதுடன் அவற்றின் பயன்பாட்டையும் நாம் முழுமையாக பெறுவதற்கு வழி செய்தல் வேண்டும். நமது உடலுக்கு ஆரோக்கியமான உணவை நாம் உண்ணும் போது அவை உடலினை நாம் கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்கு உதவும். இதனுடன் நோயெதிர்ப்பு சக்தியையும் நாம் மெருகூட்டிவிட முடியும். நோயெதிர்ப்பு சக்தி நலிவடைந்தால் தற்போது பரவிவரும் எந்த தொற்று நோய்களும் எமது உடலிலும் தொற்றுதலாகிவிடும். இதனை நாம் தவிர்ப்பதற்கு முன்கூட்டிய நோயெதிர்ப்பு விடயங்களில் கவனஞ்செலுத்துதல் அவசியமாகும்.

எமதுடலுக்கு ஆரோக்கியமான உணவினை நாம் தெரிந்தெடுத்து உண்ணல் என்றுமே சாலச் சிறந்தது. உடலுக்கு தேவையான அளவை மட்டும் நாம் உணவாக கொள்ளவேண்டும். நாம் வீட்டில் வளர்க்கும் நாய் பூனைகளைப் பாருங்கள். எவ்வளவு சுவையான உணவானாலும் தமது உடலுக்கு தேவையானதை மட்டும் உணவாக கொள்வதும் மீதியை உண்ணாமல் விடுவதும் இங்கே கவனிக்கத்தக்கது. எந்த நாயும் பூனையும் வயிறு உப்பலாகி தொந்தியுடன் இருப்பதில்லை. ஐந்தறிவு ஜீவன்களுக்கு தெரிந்த இந்த உத்தி எம்மவர்க்கு தெரியாமல் போனதேன். அல்லது தெரிந்தும் நாம் உணவினை மேலதிகமாக உண்பதென்றால் அதன் பின் விளைவுகளையும் சந்திக்க தயாராக வேண்டும். நுண்ணுயிர்க்கொல்லிகளுக்கெதிரான தடைகள் [Antimicrobial resistance] பயன்பாட்டை அவசியமின்றி உள்ளெடுப்பதனையும் மருத்துவரின் சிபாரிசின்றி பயன்படுத்துவதனையும் நாம் தவிர்த்துக்கொள்வோம். அது அறிவினை இந்த விடயத்தில் ஆழமாக பயன்படுத்தினால் நாம் அனைவரும் சுகதேகிகளாக வாழ வழியுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 நாட்களுக்கு...

கருத்திற்கொண்டு எதிர்வரும் 3 நாட்களுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று 27, நாளை 28 மற்றும் நாளை மறுதினம்29ஆம்திகதிகளில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெறமாட்டாது.

குறித்த தினங்களில் நடைபெற விருந்த பரீட்சைகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 21 ஆம், 22 ஆம் மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.(ம-7)

## யாழ்.கல்வி...

தற்காலிகமாக மூடப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரி மற்றும்யாழ்ப்பாணம் கதீஜா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்புக் கருதி இன்றும் (27.11.2024) நாளையும் (28.11.2024) தற்காலிகமாக மூடுமாறு பதில் அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-7,33)

## இரணைமடுக்...

எனவே இரணைமடுக் குளத்தின் கீழ்ப் பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ம-7,316)

## அர்ச்சுனாவுக்கு...

டுள்ளார்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக அர்ச்சுனாவுக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறு நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பு - பேஸ்லைன் வீதியில் கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் திகதி காரைச் செலுத்திச் சென்ற அர்ச்சுனா இன்னுமொரு காரை மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், அந்தக் காரின் சாரதியைக் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், சந்தேகத்துக்குரிய இராமநாதன் அர்ச்சுனா தொடர்ந்தும் வழக்கு விசாரணைகளில் முன்னிலையாவதைத் தவிர்த்து வருவதனால் அவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பிரபாகரனின்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70ஆவது பிறந்த தினமான நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.வல்வெட்டித்துறை, ஆலடிப் பகுதியில் அமைந்துள்ள தலைவர் பிரபாகரனின் பூர்வீக வீடு அமைந்திருந்த காணிக்குள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர்கள் மற்றும் பொது மக்களால் 70 மரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

அதேவேளை, 70 மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும் இதன் போது வழங்கப்பட்டன.

மேலும் நல்லூரிலும் 7 சகாப்தத்தை குறிக்கும் வகையில் 7 பானைகளில் பொங்கல் பொங்கப்பட்டது. மேலும் 70 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. சாவகச்சேரி, கிளிநொச்சியிலும் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள்முன்னெடுக்கப்பட்டது. (ம-7,33)

## உயிரிழந்த...

அரசாங்கத்துக்கு அதிகாரமும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூர அரசாங்கம் அனுமதித்துள்ளதா? என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளதாவது"

2019ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்டிருந்த வர்த்தமானியின் பிரகாரமே செயற்படுவோம். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பயங்கரவாத அமைப்பையோ அல்லது அதன் உறுப்பினர்களை நினைவுகூரவோ இடமளிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறவில்லை. குறித்த வர்த்தமானியின் பிரகாரம் பயங்கரவாத மற்றும் தடைசெய்யப்பட்ட அமைப்புகளையோ அல்லது அதன் உறுப்பினர்களையோ நினைவுகூர முடியாது. அதேபோன்று குறித்த அமைப்புகளுக்காக நிதி சேகரித்தல், பிரசாரம் செய்தல், ஒருங்கிணைத்தல், கொடிகளைப் பயன்படுத்தல், சின்னங்களை பயன்படுத்தல், பாடல்களைபயன்படுத்தல்என அனைத்து விடயங்களும் இதன் ஊடாக தடை செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணிகளின் பிரகாரம் தான் அரசாங்கம் செயற்படும். இந்த விடயத்தில் பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் தெளிவாக ஊடகங்களுக்கு கூறியுள்ளார். ஆனால், உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர அனைவருக்கும் உரிமை உண்டு. இதற்கு தடையை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை" இவ்வாறு நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.(ம-7)

## ஒரு...

த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக ஒருவர் உயிரிழந்ததோடு 5 பேர் காயமடைந்துள்ளனர்.

821 குடும்பங்களைச் சேர்ந்த 2,770 பேர் நிவாரண நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த அனர்த்தத்தால் 6 வீடுகள் இடிந்தும், 265 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(ம-7)

## வட...

ஆயிரத்து 191 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்று மாவட்ட அரசாங்க அதிபர்களினால் அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதற்கமைய யாழ்ப்பாணமாவட்டத்தில் 2 ஆயிரத்து 706 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 642 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் பலர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 48 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 13 ஆயிரத்து 860 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 295 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 589 குடும்பங்களைச்சேர்ந்த 2 ஆயிரத்து 49 பேர் இடைத்தங்கல் முகாம்களில்தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 811 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 750 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 148 குடும்பங்களைச் சேர்ந்த 480 பேர் பாதிப்படைந்துள்ளனர். இதே நேரம் வவுனியா மாவட்டத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேர் பாதிப்படைந்துள்ளனர் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.(ம-7,30,33,250,299,285,315)

### மஹஜன சம்பத

திகதி 2024.11.26 — சீட்டிழுப்பு இலக்கம் 5667

வெற்றி இலக்கங்கள்: X 4 7 1 4 2 3

அத சம்பத: X 1 4 2 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0242

### தன நிதானய

திகதி - 2024.11.26 — சீட்டிழுப்பு இலக்கம் - 1697

X 07 18 53 60 X — Double Chance 87188

### மெகா பவர்

திகதி 26/11/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2015

E 04 12 16 63 64 — Double Chance 032730

### லக்கி 7 VIP

திகதி 2024.11.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0493

S 5 2 7 6 5 9 S

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3909 — சீட்டிழுப்பு திகதி 26.11.2024

U 20 22 24 30 — U 159535

### ஹந்தஹன (HANDAHANA)

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.11.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0976

ரிஷபம் 03 18 39 43 ரிஷபம் — 100625 — 17

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா

26.11.2024 — வெற்றி வாரம் 375 — ஆங்கில எழுத்து L — 8 5 4 9 3 4 — 30785

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,211,037.20

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2641 — சீட்டிழுப்பு திகதி 2024.11.26 — தினம் செவ்வாய்க்கிழமை

05 41 43 72 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.70,605,479.20

### சனிதா

திகதி 26.11.2024 — வெற்றி வாரம் 4802

28 36 43 51 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,454,698.40

செகண்ட் சான்ஸ் ரூ.100,000/- 48168

### சசிரி

வெற்றி வாரம் 565 — சீட்டிழுப்பு திகதி 26.11.2024 — செவ்வாய்க்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 18 29 45

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4353 — சீட்டிழுப்பு திகதி 26.11.2024 — தினம் செவ்வாய்க்கிழமை

02 43 52 61 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,733,070.00 — 152278

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: X 21 05 16 21 62

1817 — 26.11.2024 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,462,303.00

### அட கோடிபதி (ADA KOTIPATHI)

செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2467 — சீட்டிழுப்பு திகதி 2024.11.26

25 33 41 61 M — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.85,171,316.80

ரூ.100,000/- 133941

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 07 - 1932



மறைவு
26 - 11 - 2024

## வைத்திலிங்கம் பாக்கியம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பாக்கியம் அவர்கள் நேற்று 26.11.2024 செவ்வாய்க் கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரபி - கண்ணாத்தா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னவி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சாத்திரி சின்னத்தம்பி, சின்னத்துரை, தளையசிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகேஸ்வரி, பாக்கியநாதன், பரமேஸ்வரி, கணேசலிங்கம், தங்கராசா, இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவவடிவேல்(விஜயன்), செல்வராஜா, நவரட்ணராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சின்னராசா, தர்மராசா,சோதிமலர் காலஞ்சென்றவர்களான அரியமலர், கார்திகேசு, சரோஜாதேவி ஆகியோரின் மாமியாரும் மல்லிகாதேவி, காலஞ்சென்ற வர்களான பார்வதி, செல்லம்மா, நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.11.2024 புதின்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-1663)

# இன, மத, சாதி அடிப்படையில் அமைச்சரவை உருவாக்கப்படவில்லை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன, மொழி, சாதி அடிப்படையில் அமைச்சரவையை உருவாக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையை கையாளக் கூடிய மிகத்திறமை வாய்ந்த தனி நபர்களையே நாங்கள் தெரிவு செய்திருக்கின்றோம்.

மேல் மாகாண ஆளுநராக முஸ்லீம் வர்த்தகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி சபாநாயகர் பிரதி அமைச்சர் பதவிகளை முஸ்லீம்களிற்கு வழங்கியுள்ளோம்.

மேலும் தேசியப் பட்டியல் மூலம் முஸ்லீம் ஒருவருக்குப் பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளோம்.

நாங்கள் இலங்கை முழுவதிற்கும் சேவையாற்றுவது குறித்தே கவனம் செலுத்துகின்றோம்.

இன, மத, மொழி அடிப்படையில் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1662)

மொத்தக் கொள்வனவு
அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள்.
ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
077 121 5546
48/=
80/=
(580)

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்யப்பட்டு எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500
(2491)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
08 • 12 • 1936



மறைவு
31 • 10 • 2024

கடந்த 31.10.2024 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்ப விளக்கு

## அமரர் முத்துக்குமாரசாமி கமலவேணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 28.11.2024 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று 30.11.2024 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழு மேற்கு,
ஊரெழு.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(575)

# இதய அஞ்சலி

நிஜமாக
22 • 04 • 1939



நிழற்படமாக
24 • 11 • 2024

5 ஆம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்,
வெள்ளவத்தை கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் திருமதி கனகசூரியர் ஞானம்மா

பத்து மாதம் சுமந்து பெற்றாள்
பகலிரவாய் விழித்திருந்து வளர்த்தாள்
வித்தகனாய் கல்வி, செல்வம், வீரம் பெற வைத்தாள்
மேதினில் வாழ வழி அமைத்தாள்

அன்னையைப் போல் தெய்வம் ஒன்றில்லை
அவள் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை
மண்ணில் மனிதரில்லை

தாய் மனசு தங்கம் நானறிந்த தெய்வம்
நன்றி சொல்லப் போதாதம்மா
ஏழேழு ஜென்மம்
இது என்றும் மாறாத சொந்தம்

(578)

இறுதிக் கிரியை நடைபெறும் இடம் : இல.19, ஆஸ்பத்திரி வீதி,
(கொட்டடி நமசிவாயம் பாடசாலைக்கு அருகில்) கொட்டடி, யாழ்ப்பாணம்.
அமரரின் மகன் சந்திரனின் இல்லத்தில்

...வீதி,
...கோவிலடி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
இராசன் குடும்பம் (பேறாமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.